
வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# வாழ்வோம் வாழ்விப்போம்–1

தமிழும் ஞானமும் தரணியை ஆளும்

தமரென உலகோர் நம்முடன் இணைவர்

அமரர் உலகம் அருகுவந் தருளும்

நமக்கிணை யிலையென வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்


# வாழ்வோம் வாழ்விப்போம்–2

இன்சொல் பழகி இல்லார்க் குவந்து
நன்மதி வளர்த்து நாட்டோர்க் கருளி
முன்வினை மூலம் உணர்ந்தோனைத் தொழுது
தன்வினைப் போயிட வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# வாழ்வோம் வாழ்விப்போம்–3

கற்பது உண்மை காப்பது பெருமை

அற்புதங் கோடி அமைந்த உடலினைக்


கற்பகம் போலே போற்றி வைத்திறை

பொற்பதம் பணிந்து வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–4

சொல்லுஞ் செயலும் ஒருவழி நிற்க

அல்லும் பகலும் அகந்தொழு திருக்க


வெல்வது என்பது வெற்றென உணர்ந்து

கொல்லா நெறியில் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–5

யுத்தம் செய்வது கீழோர் செயலென

சத்தம் அடக்கி சன்மார்க்கம் பழகி


சுத்தம் பேணும் ஞானம் நிறைந்து

பித்தம் விலக்கி வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# வாழ்வோம் வாழ்விப்போம்–6

பெற்றாரை ஒதுக்கி பெண்துணை பின்செல்லும்

கற்றாலும் கல்லானாய் காணும் மகன்மேலே


பற்றில்லா திருத்தல் பெற்றோர்க் கழகென

சுற்றி உரைத்து வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–7

அவரவர் விதிப்படி அமையுமென் றறிந்து

தவறென எதையும் தாங்கிப் பிடிக்காது


சுவருள வரைக்கே சித்திரங் கூடுமென்

றுவப்புடன் உலகில் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்


## வாழ்வோம் வாழ்விப்போம்–8

மூத்தோர்க் குதவி முறையுடன் பழகி
காத்தோர்க் கிசைந்து கடுகாமங் கடந்து
ஆத்திரம் அடக்கி ஆகாத வொதுக்கி
சூத்திரம் தெரிந்து வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்


## வாழ்வோம் வாழ்விப்போம்–9

கோடி கிடைக்கினும் கூடாத வெறுத்து
ஆடி அடங்குமுன் அறிவன அறிந்து
கூடி நல்லோர் குழுவினில் இணைந்து
பாடி மகிழ்ந்து வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# வாழ்வோம் வாழ்விப்போம்–10

எத்தனை படித்தும் எழுத்தறி வில்லா

பித்தனைப் போல பிதற்றியே திரிந்தும்

வித்தினை அழித்து வினைபின் தொடர்ந்து

செத்திங் கழிவதோ வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–11

காலன் வருகிற காலம் அறியார்

ஞாலம் முழுதும் ஆண்டிடத் துடிப்பார்

கோலங் களைந்து குறுகியே விழுமுன்

சீலந் தெரிந்து வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–12

உள்ளப் பதிவை உருகிட வைத்து

கள்ள மலத்தை கரைத்திட செய்து

வள்ளல் திருவடி வாழ்த்தி வணங்கி

அள்ளி அமுதுண்டு வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–13

கண்டு சொல்வாரை காணாது ஒதுக்கி

பண்டு பழங்கதை பயன்படா துணர்ந்து


தண்டு ஊன்றுமுன் தவக்கோலந் தரித்து

தொண்டு செய்தினி வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# வாழ்வோம் வாழ்விப்போம்–14

பிறர்குற்றம் பார்க்கின் தன்குற்றம் பெருகும்

புறங்கண்டு ஒதுக்கின் அகக்கண்ணுந் திறக்கும்


அறமொன்றைப் பேண ஆனந்தங் கிடைக்கும்

பிறப்பற்று மண்ணில் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–15

அஞ்சுதல் என்பது அகத்தில் இல்லை

கெஞ்சுதல் என்பது எதற்கும் இல்லை


வஞ்சகம் நெஞ்சில் வருவதே இல்லை

நெஞ்சுரம் கொண்டு வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–16

வையம் முழுதும் இனி நமக்கே

வாய்ப்புகள் குவியும் பயம் எதற்கே


செய்யும் தொழிலில் வளங் குவித்தே

பொய்யின்றி நாளும் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–17

ஞானக் கல்வியை ஞாலத்தில் பரப்பி

தானமும் தவமும் தழைத்திடச் செய்து


மானமும் ரோசமும் இல்லா தெழுந்து

வானமும் வசப்பட வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–18

கோபமுங் காமமும் உயிருக்கு கொல்லி

சாபமும் வரமும் வேண்டாமென் றெண்ணி

தாபமும் தூபமும் புறத்தினில் தள்ளி

தீபமாய் ஒளிர்ந்து வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–19

அன்னை தந்தையின் அடிதினம் தொழுது

தன்வினைப் போக்க இறையினை வணங்கி


முன்னை வினையின் முடிச்சினை அவிழ்த்து

பின்னொரு பிறப்பிலா வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–20

சித்தர் திருவடி சிந்தைக்கு விளக்கு

முத்தர் நிலைபெற முயன்றதைத் துலக்கு


பித்தரைப் போலே போடாதே கணக்கு

இத்தரை போற்ற வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–21

அடுத்தவர் பொருள்மேல் ஆசையும் வேண்டாம்

கெடுத்துப் பிறரைக் கொல்லவும் வேண்டாம்

படுத்துத் தூங்கியே கழிக்கவும் வேண்டாம்

எடுத்ததை முடிக்க வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–22

பகையென யாரும் பாரினில் இல்லை

பக்குவ மின்மையே பிரிக்கிற எல்லை

மிகைபட எண்ணி மிதிப்பதால் தொல்லை

வகைபட அறிவொடு வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–23

பட்டமும் பதவியும் ஆசையின் தேவை

சட்டமுஞ் சடங்கும் சமுதாய கோவை


நட்டமும் இலாபமும் வினையின் சேவை

திட்டமும் தெளிவுமாய் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்


## வாழ்வோம் வாழ்விப்போம்–24

குருவழி ஒன்றே குணத்தைக் காக்கும்
உருவழி வாழ்கையில் பெருநெறிக் கூட்டும்
திருவழி தவத்தைப் பெறவழிச் செய்யும்
அருவழி பாட்டுடன் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–25

முன்வினை கண்டு முடிவிற்கு மருந்து

அன்புடன் தந்து அகத்தொளி ஏற்றி


இன்புடன் வாழ இசைத்தமிழ் விருந்து

ஈன்றவர் நினைப்புடன் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–26

பிறவிக்குக் காரணம் பிழைத்த கர்மாவாம்

மறலிக்குப் பின்னும் தொடர்ந்தது வருமாம்


அறிவினால் மட்டுமே அதைத்தடுக்க லாகுமால்

அறிவினைப் பெருக்கி வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்

ஞானவெளி மெய்ப்பிரான்

ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–27

ஆன்மத் தேடலும் உயிர்தத்வ மீட்பும்

சான்றோ னாகிட வாழ்வியல் கல்வியும்


அன்பே குறியும் அறிவே வழியும்

அன்புசெய் தமைதிபெற வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–28

எதுதேவை என்றறியா தோடுகிற வாழ்வில்

எதுஎது தேவையோ அதுஅது கிடைத்திட


வழிவகை யுண்டென உணர்ந்தவர்க் கென்றுமே

பழியிலை புகழுடன் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# வாழ்வோம் வாழ்விப்போம்–29

மருள்கொண்டார் நெஞ்சம் மதித்தறிய ஒன்னா

இருள்கொண்ட ஆற்றல் இருநிலத்து மென்றும்


கருக்கொண்ட நாள்முதலா தொட்டவினை ஈதாய்

இருப்பதனை ஓர்ந்து வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–30

யாரும் யார்க்கும் பெரியாரு மில்லை

யாரும் எவர்க்கும் சிறியரு மில்லை

ஊரும் உறவும் உற்றப் பதவியும்

பேரும் வினையென்று வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–31

மற்றாரை மயக்கித் தன்வழிக்கு இழுப்பாரும்

கற்றாரே ஆனாலுங் கெட்டாரே அகங்காரம்

பெற்றதினால் தன்னடிமை யாக்குதற்கு முயல்வோரே

உற்றிதனைத் தெரிந்து வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்


## வாழ்வோம் வாழ்விப்போம்–32

இரவே பகலினு மினிதெனத் தேர்ந்து
இறையை நினைக்க முயன்றிடு வீரே
குறையே மிகினும் கரைந்ததுப் போகும்
நிறைவே தொடர வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–33

தனக்குத் தானே நல்லவ னாயினும்

தன்மன ஆசைக்கு பிறர்பலி ஆக்கிட


எண்ணுவ தென்பதே இழுக்கென நினைந்து

உண்ணுவம் உயர்வை வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–34

அறிவொன்றே மண்ணில் அடையாளப் படுத்தும்

அறிவில்லா நிலையாவுங் கர்மாவில் புகுத்தும்


அறிவேண்டி அலைவார்க்கு அருள்வந்து கொட்டும்

அறிவைத் துணைக்கொண்டு வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்


## வாழ்வோம் வாழ்விப்போம்–35

வேதம் பெற்றோர்க்கு வேதனைகள் வாராது
சேதம் சஞ்சலத்தால் மனம்தந்து வாட்டாது
ஆதம் அந்தமெலாம் அறிவறியா போகாது
நாத சுகங்கண்டு வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–36

பெற்றோரைக் காக்காது ஒளித்த மகன்மேலே

குற்றங் கூறாது குறையெல்லாந் தன்வினையால்


பற்றற்று வாழ்வதுவே பலனளிக்கும் என்றறிந்து

கற்றறிவோம் கர்மாவை வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–37

பொருள்வேண்டி மண்ணில் போராடி அழியாது

அருள்வேண்டி அலைவார்க்கு ஆறுதலும் ஆற்றலுடன்

உருவாகிக் காக்கும் உளத்தூய்மைப் பெற்றார்க்கே

திருவாகும் நிலைக்கூடும் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–38

அந்தம் எதுவென்று அறியாது வாழ்வோர்க்கு

சொந்தம் இருந்தென்ன சொப்பனம்போல் நாள்போகும்

வந்தப் பிறவிக்கு வகைத்தேடி கொள்வார்க்கே

முந்தை வினைகழியும் வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–39

தன்னைத் தானறிய தனக்கொரு குருவேண்டும்

தன்னைத் தானறிந்தால் குருபாதம் சரண்கிட்டும்

தன்னைத் தானறிதல் குருதொண்டில் முடிவாகும்

தன்னைத் தானறிய வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## வாழ்வோம் வாழ்விப்போம்–40

வானமிர்தம் நாடிச் செல்வார்க்கு வையத்தில்
தானமிழ் தாய்க்காணும் தமிழைப் பெற்றாலே
ஞானமுதங் கிட்டும் மறைபோலே மயங்காது
தேனமுதாய் உண்டு வாழ்வோம் வாழ்விப்போம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!